# பாரத மாதாவே மனமிரங்காயோ!

## 1989 இல் நடைபெற்ற வல்வைப் படுகொலைகளின் 23ம் ஆண்டு நினைவாக.........

ஆங்கிலேயருக்கு இந்தியாவில் **“யூலியன்வாலா”**
அமெரிக்காவுக்கு வியட்னாமில் **“மைலாய்”**
இந்தியாவக்கு இலங்கையில் **“வல்வை”**
என வர்ணிக்கப்பட்ட 1989ம் ஆகஸ்ட் 2ம்,3ம்,4ம் திகதிகளில் தொடர்ந்து 03 நாட்கள் நடைபெற்ற “வல்வைப் படுகொலை” நினைவாகவும் அதில் இறந்தவர்களது ஆத்மாக்களின் வேண்டுகோளாகவும் இக்கட்டுரை இந்தியாவுக்கு சமர்ப்பணம்.

**“ஈழத்தமிழரை இனி தெய்வம்தான் காப்பாற்ற வேண்டும்”** என்று கூறியவர் வேறு யாருமில்லை ஈழத்து காந்தி என்று அகிம்சை வழியில் வாழ்ந்த அமரர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களே ஆவார். அவர் தமது தள்ளாத வயதிலும் ஈழத் தமிழருக்காக வாழ்ந்தவர். இலங்கைப் பாராளுமன்றில் அவர் அவ்வாறு குரல் கொடுத்த பொழுது அவரது பேச்சுக்கும் அவரது குணத்திற்கும் மதிப்பளித்து மௌனம் காத்த இலங்கைப் பாராளுமன்றம் இதுவரை ஈழத் தமிழருக்காக எதுவுமே செய்யவில்லை. ஈழத் தமிழர் பலத்தை நிரூபிப்பதற்காக தமது பாராளுமன்ற பதவியைத் துறந்து மீண்டும் காங்கேசன்துறைத் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தி அதில் அமோக வெற்றியீட்டியயவர்.

அகிம்சை வழியில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பெற்று மானத்துடன் வாழ வேண்டும் என்று தமது தள்ளாத வயதிலும் எத்தனையோ சத்தியாக்கிரக அமைதிவழிப் போராட்டங்களை நடாத்தி தோல்வி கண்டு இறுதியாக பாராளுமன்ற பதிவேட்டில் பதிவை ஏற்படுத்திய வசனமே **“ஈழத்தமிழரை இனி தெய்வம்தான் காக்க வேண்டும்”** என்பது. அதனைத் தொடர்ந்து தந்தை வழியில் மற்றுமொரு தேர்தலில் ஒட்டுமொத்த தமிழரும் வாக்களித்து எதிர்கட்சித் தலைமை பதவியை அமரர் அமிர்தலிங்கத்துக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். அவரும் தமது பதவி மூலம் உலகின் கண்களைத் திறந்து தமிழர் படும் இன்னல்களை எடுத்துக் கூறி ஈழத் தமிழர்கள் அனைவரும் சுய மரியாதையுடன் வாழ அயராது உழைத்து நின்றார். தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்களை பட்டியலிட்டு அலுத்துவிட்டது.

ஆனாலும் படு கொலைகளும், கற்பழிப்புக்களும், உயிரோடு எரியூட்டும் எம் உறவுகளின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டு சென்றதே தவிர தமிழர் வாழ்வில் பூச்சியமே விடையானது. அதனால் இளைஞர்கள் வெகுண்டு எழுந்தனர். எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக வன்முறையை கையாண்டு பேருந்துக்களை எரியூட்டியும் அரச கட்டிடங்களை அலங்கரித்த பெயர்ப் பலகைகளை தாரூற்றி அழித்தும் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். அரசு ஆயுத பலம்கொண்டு இளைஞர்களை அடக்க நினைத்தது. முடிவுகள் மாறாக வரலாற்று நிகழ்வுகளை தந்தது. இளைஞர்கள் தமது கையில் ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்தியது. அரச யந்திரம் முடுக்கி விடப்பட்டு ஈழத்தமிழர் அனைவரும் ஈழத்தின் எப்பாகத்திலும் வாழமுடியாத நிலையை ஏற்படுத்தியது. தென் இலங்கையில் இருந்த எமது உறவுகள் அடி உதை பட்டு செய்வதறியாது உடுத்த உடையுடன் இலங்கையின் வடக்கு நோக்கி வர நேரிட்டது. 1958ம் மற்றும் 1983ம் ஆண்டுகளை முக்கியமாக குறிப்பிடலாம். இக்காலங்களில் பலர் படுகொலையுண்டனர்.

சுருங்கக் கூறின் இலங்கை சுதந்திரமடைந்த பின் அதாவது தமிழர்களின் சுதந்திரம் பறிபோனபின் அவர்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் துன்பங்களை அனுபவிக்கத்தொடங்கினர். ஈழத்தமிழர்களின் இத்தனை துன்பியல் நிகழ்வுகளுக்கும் வியாபார நோக்கத்தில் "கிழக்கிந்திய வர்த்தக கம்பனி" என்ற பெயரில் இங்கு வந்த ஆங்கிலேயரே காரணம். முஸ்லிம், சிங்களக் கலவரம் நடந்தபோது கப்பலேறிச்சென்று இங்கிலாந்து மகாராணியிடம் உத்தரவு பெற்றுவந்து கலகத்தை முடிவுக்கு கொண்டு வந்த சேர் பொன் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்களையும் அவர்கள் சிங்கள முஸ்லிம் மக்களால் கௌரவிக்கப்பட்டமையையும் இப்போ எமது பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிதாப நிலையையும் மனதில் கொள்ளவேண்டியுள்ளது.

இங்கிலாந்து கூட தான்விட்ட தவறுக்காக தன் தர்மீகக் கடமையை இன்றும் செய்யாது இருப்பது பெரும்வேதனையாகவுள்ளது. ஏனெனில் உலகம் இப்போ வர்த்தக மயமாக்கப்பட்டுள்ளது. அதில் இலங்கைத் தமிழர் வியாபாரப் பொருளாகிவிட்டனர்.

1958களில் ஆரம்பமான கொலைவெறி முள்ளிவாய்க்காலில் 2009இல் கோரத்தாண்டவத்துடன், வரலாறு காணாத ரணங்களுடன் அதாவது கருவறையிலுள்ள குழந்தை முதல் கல்லறைக்குப் போகும் முதியோர் வரை கொல்லப்பட்டு தனது வக்கிரப் பெருமூச்சை நிறுத்திக்கொண்டது இல்லை தணித்துக்கொண்டது. ஈழத்தில் தமிழராக பிறந்த ஒவ்வொருவரும் இவற்றை அனுபவிக்கவேண்டியது. காலத்தின் கட்டாயமோ அன்றி விதியின் விளையாட்டோ தெரியவில்லை ஈ, காக்காய், பூனை, நாய்கள் கூட சுய கௌரவத்தை இழக்க விரும்புவதில்லை. ஆனால் மானிடரான இலங்கைத் தமிழரின் நிலையோ!!!

இன்று 23/07/2012 இக்கட்டுரையை வரையும் போது 1983இல் பூட்டிய சிறைக்குள் கொலையுண்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோருடன் கொலையுண்ட தமிழ் இளைஞர்களின் கொடூரமான துன்பியல் நிகழ்வுகள் தொடக்கம் சமீபத்தில் வவுனியாச் சிறையிலிருந்து கொண்டுசெல்லப்பட்டு கொலையுண்ட நிமலரூபன் வரையான துன்பியல் நிகழ்வுகள் மனத்திரையில் ஓடிமறைகின்றன.

ஆரம்பத்தில், பூகோள ரீதியில் இலங்கைக்கு அருகில் உள்ள இந்தியா குரல் கொடுத்தது. இந்தியாவால் கண்டனங்களும் வருத்தங்களும் மாறி மாறி தெரிவிக்கப்பட்டதுடன் பின்னர் அன்னை இந்திரா காந்தி அவர்களால் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டது. அன்றைய தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர் அவர்களும் தமது பதவிக்கு மேலாக உதவிக் கரம் நீட்டினார். இளைஞர்கள் கை ஓங்கும் போதெல்லாம் ஒப்பந்தங்கள் பேச்சு வார்த்தைகள் என காலம் இழுத்தடிக்கப்பட்டது. அன்னை இந்திரா காந்தி அம்மையார், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் ஆகியோரது மரணத்தின் பின் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமரான போது தமிழர் பிரச்சனை நதியில் விழுந்த கல் போல் தடைபட்டு உருண்டோடி இறுதியாக இந்தியாவின் கைதனில் ஒப்படைக்கப்பட்டது. அமைதி காக்க என்ற பெயரில் இந்திய இராணுவமும் இலங்கையில் காலூன்றியது. வரலாறு வளர்ந்து கொண்டே சென்றது. அமைதி காக்கவந்த இராணுவம் தமது ஆயுத பலத்தை ஈழத் தமிழர் பக்கம் நீட்டி வெந்த புண்ணில் வேல் பாச்சுவது போல் ஈழத் தமிழர் நெஞ்சங்களில் குருதியை உறைய வைத்தது.

1989 ஆகஸ்ட் 2ம்,3ம்,4ம் திகதிகளில் அதாவது தொடர்ந்து மூன்று நாட்கள் வல்வையில் 63 பொதுமக்களுக்கு மேல் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொலல்லப்பட்டனர். வல்வைப்படுகொலைகள் என்ற ஆவண நூலின்படி கொலைகள் 63, படுகாயமடைந்தோர் 43, எரிக்கப்பட்ட வீடுகள் 123, கடைகள் 45, எரியூட்டப்பட்ட மீன்பிடி படகுகள் 176, இவ்வழிவுகளின் அர்த்தம் என்ன என்று இன்னும் எமக்குப்புரியவில்லையே! இலங்கை அரசையும் உலக நாடுகளையும் வியக்க வைத்து அமெரிக்கா வரை அன்ன பூரணி என்ற

பாய்மரக் கப்பலை செலுத்தி சாதனைகள் பல புரிந்த வல்வை மக்களின் மண் அவர்களது செங்குருதியாலேயே நனைந்த பொழுது இந்தியா இதுவரை வடித்த கண்ணீர் நீலிவிழிக் கண்ணீரானது என்று எண்ணத் தோன்றியது. அதுவே ஊதிப் பெருத்து இறுதியாக முள்ளிவாய்காலில் முடிவுற்றது. ‘‘ஒப்பரேசன் லிபரேசன்’’ எனும் இராணுவ நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத்முதலி காலத்தில் நடாத்தப்பட்ட போது இந்திய வானூர்திகள் இலங்கை வான் எல்லைக்குள் புகுந்து பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வானிலிருந்து போட்டு ஆபத்பாந்தவனாக தன்னை இனம் காட்டிக் கொண்டமையால், ஈழத்தமிழர்களின் இந்தியா மீதிருந்த நம்பிக்கை அசைக்க முடியாத ஒன்றாகவே திகழ்ந்தது.

ஏன் இதுவரையிலும், நாம் இந்தியா எம்மை காப்பாற்றும் என்றுதான் நம்பியுள்ளோம். இதனால் இந்திய அரசின் நாடாளுமன்ற அங்கத்தவர்களும், அமைச்சர்களும், பிரதி நிதிகளும் பாதுகாப்பு அமைச்சர்களும் அவ்வப்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போதெல்லாம் ஈழத் தமிழர் சம உரிமை பெற்று வாழ இலங்கை அரசு சட்ட திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வந்துள்ளனர். உலகப் புகழ்பெற்ற ஒரு தமிழரான அப்துல்கலாம், இரக்கத்திற்கு இலக்கணமான பெண்குலத்தின் பிரதிநிதியாக பிரதீபா பட்டேல் ஆகிய ஜனாதிபதிகளும், பஞ்சபாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் தூது போன கிருஷ்ண பரமாத்மா போல, பார்த்தசாரதி தொடக்கம் இந்திய வெளியுறவு மந்திரி கிருஷ்ணன் போன்ற தூதுவர்களும், இந்திய அமைச்சரவையின் பலதரப்பட்ட பிரதிநிதிகளும், கடந்த வாரம் கூட இலங்கைக்கான இந்திய தூதுவர் **அசோக் K.காந்தா** போன்ற பல தரப்பட்டவர்களும் வந்து போகிறார்கள். ஆனால் எமது நிலமைகள் உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகவே உள்ளன. தமிழ்நாட்டினாலும் சரி இந்திய வெளியுறவுக்கொள்கையாலும் சரி எங்களைக் காப்பாற்ற முடியாமை மட்டுமல்ல, இருந்ததைக்கூட காப்பாற்ற முடியாத நிலைக்குள்ளாகி பரிதவிக்கின்றோம். எமது கண்ணோட்டத்தில் தமிழ்நாட்டு காட்சிகளும் இந்திய மத்திய அரசும், அமெரிக்காவும் கூட தமது சுயநலன்களுக்காக எம்மை பகடைக்காயாக்கியுள்ளனவா? என்பது இங்குள்ள ஒவ்வொரு சாதாரண குடிமகனும் எழுப்பும் கேள்வியாக உள்ளது.

பழைய மொந்தையில் புதிய கள்ளு என்பது போலல்லாமல் எங்கள் மதிப்பிற்குரியவரும், முதிர்ந்த அனுபவசாலியுமான புதிய ஜனாதிபதி **பிரணாப் முகர்ஜி** அவர்களாவது இவ்விவகாரத்தில் தற்துணிவுடன் சில கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி ஆகக்குறைந்தது 1987இல் கைச்சாத்தான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்படியான 13ம் திருத்த சட்ட மூலத்தை அதாவது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை இங்கு நடைமுறைக்கு கொண்டுவர ராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இன்னும் ஈழமக்கள் நம்புகின்றனர். இதுவும் பழைய பல்லவியாகி பிரிந்த ஆன்மாக்களுக்கு ஆறுதல் கூற முடியாத நிலையை உருவாக்கிவிடாதீர்கள்

எமது உரிமைக்காக போராடிய இளைஞர்கள், மரணித்த பொது மக்கள் ஆகியோரது எத்தனையோ தியாகங்கள் வெறும் கானல் நீராகாது சுய உரிமை பெற்று வாழ இந்தியாவின் வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் கலந்து மறைந்த கதையாகாது இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கும் ஈழத் தமிழர் பிரச்சனையை தீர்ப்பதில் இந்தியாவுக்கு ஒரு தார்மீக பொறுப்பு உள்ளது என்பதை வலியுறுத்தியும் அன்று இந்திய இராணுவத்தால் மரணித்த 63 பொது மக்களின் அஞ்சலி நினைவாகவும் இன்று ஆகஸ்ட் 2ம் திகதி வல்வை மக்களின் கோரிக்கையாக இதை சமர்ப்பிக்கின்றோம்.

- **வல்வை ஜெயம்** -



படம் 1

மூன்று நாட்களுக்குப்பின் சடலங்களை அகற்றிய பின் உள்ள இரத்தோட்டக் காட்சி



படம்2

எல்லாவற்றையும் இழந்து முக்கிய ஆவணங்களையும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் இழந்தவரின் பரிதாபநிலை




படம் 3



படம் 3-I

தமது எரியூட்டப்பட்ட வீட்டினை சோகத்துடன் பார்க்கும் குடும்பம்






படம் 4

படம்4 –I

“வல்வைப் படுகொலைகள்” என்னும் தலைப்பில் தற்போதைய வல்வை நகரபிதா திரு.ப.அனந்தராஜ் அவர்களால் வெளியிடப்பட்ட ஆவண நூலின் அட்டைப்படம்



படம் 5

எரியூட்டப்பட்ட தமது வீட்டினை தம் குடும்பத்தினருடன் பார்வையிடும் ஒரு அரச உத்தியோகத்தர் குடும்பம்.

**படம்1**
மூன்று நாட்களுக்குப்பின் சடலங்களை அகற்றிய பின் உள்ள இரத்தோட்டக் காட்சி

**படம்2**
எல்லாவற்றையும் இழந்து முக்கிய ஆவணங்களையும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் இழந்தவரின் பரிதாபநிலை

**படம் 3, படம் 3-I**
தமது எரியூட்டப்பட்ட வீட்டினை சோகத்துடன் பார்க்கும் குடும்பம்

**படம் 4,படம்4 –I**
"வல்வைப் படுகொலைகள்" என்னும் தலைப்பில் தற்போதைய வல்வை நகரபிதா திரு.ப.அனந்தராஜ் அவர்களால் வெளியிடப்பட்ட ஆவண நூலின் அட்டைப்படம்

**படம் 5**
எரியூட்டப்பட்ட தமது வீட்டினை தம் குடும்பத்தினருடன் பார்வையிடும் ஒரு அரச உத்தியோகத்தர் குடும்பம்.